**<u>எச்சரிக்கை</u>**

அரவம் சென்ற இடத்திலெல்லாம் சட்டை உரித்தது.

அடிக்கடி உரித்தல் மரித்தலில் முடியுமாமே?

பல்லிக்கு வால் போல இந்த அரவத்துக்குச் சட்டை.

கூடையிலெல்லாம் போட்டு வைத்து வித்தை காட்ட

ஒப்புவதில்லை.

ஆனால் கூடவே கீரி வளர்க்கிறது.

சட்டை உரிக்கும்போது கீரி சீறும்.

அரவமோ புதிய சட்டையைக்காட்டி அடக்கும்.

பலவிதமாய் உரித்து உரித்து, விதவிதமாய் அணிந்து அணிந்து

முதல் சட்டையின் வண்ணமும் வார்ப்பும்

இப்போது அரவத்துக்கும் நினைவில்லை;

கீரிக்கும் தெரியவில்லை. சீறுவதுமில்லை.

இரண்டையுமே நான்தான் வளர்க்கிறேன்.

மறுமுறை என்னைப் பார்க்கையில்

என் சட்டையை மட்டும் பாருங்கள்.

ஒருவேளை கண்ணோடுகண் பார்த்துவிட்டால்

உங்களுக்கு என்னை மிகவும் பிடித்துப்போகலாம்.

**ம்......**

கேள்விகள் கனக்க மெல்ல அந்த அறைக்குள் நுழைய முற்பட்டேன்.

மூச்சு முட்டியது.

பல காலமாகப் பதில்களை எதிர்பார்த்துக் களைத்து

மூப்படைந்த கேள்விகளும்,

பதில்களற்ற கேள்விகளும்,

கேள்விகளைத் தேடியலையும் வெற்றுச்சொற்களும்

நிறைந்திருந்தன.

தடுமாறியபடி கவனத்துடன் உள்ளே சென்றேன்.

சுமந்திருந்த பல கேள்விகள் நழுவி விட்டன.

உள்ளீடற்ற சில சொற்கள் செவியில் கிசுகிசுத்தன.

கண்கள் இருட்டி வரும் தருணத்தில்தான்

அந்த மூலையில் கிடந்த எனக்கான மௌனம் மின்னியது.

அள்ளியெடுத்துத் தலைமீது வைத்தபடி திரும்பியபோது

மற்றவை ஒதுங்கி வழிவிட்டன.

இப்படித்தான் வசுதேவன் யமுனையைக் கடந்திருப்பான்.

**<u>பயணம்</u>**

உறக்கம் பல உண்டு களைத்துறங்கும்

கொழுத்த கனவுகளின் சத்திரத்தை நோக்கி நானும்.

என் சவலைக் கனவுகளுக்கு சலவை உடைகள் மாற்றி

பத்திரமாய் அழைத்துச் செல்கிறேன்.

குனிந்த தலை நிமிராது மென்னடை பயில்கின்றன.

என் அவசரம் அவைகளுக்குப் புரிவதில்லை.

பெருங்கனவுகளின் குறட்டைச் சத்தம்

சத்திரம் அருகாமையில் என்கிறது.

பரபரப்பில் கால்கள் தடுமாறின.

தருவித்த நிதானத்துடன் படியேறுகையில்

ஏனோ கனவுகள் கலைந்தன.

கீழே விழுந்து பரவிக் கிடக்கும் உடைகளை

என்ன செய்வதென்று தெரியவில்லை.

**கவியும் சூது**

ஆற்றோரத்தில் அமைந்திருக்கும் இந்தச் சூதாட்ட மாளிகையிலும்

கல்லெறி தொலைவில் சிறு தீவிலுள்ள மற்றொரு கூடத்திலும்

உள்ளும் புறமும் அலைந்து திரியும் பல சகுனிகள்.

சரிக்கப்படும் சாம்ராஜ்ஜியங்களின் எச்சங்களும்,

இழுத்துச் செல்லப்படும் பாஞ்சாலிகளின் உதிரத்துளிகளும்,

ஏதோ ஒரு மகத்தான வெற்றியின் ஏளனச் சிரிப்பும்,

ஏதோ ஒரு அவமானத்தின் நறநறப்பும்

அனைத்தும் ஒருங்கே.

வற்றாமல் ஓடும் அந்தக் கேளிக்கைப் புனலின் சுழிப்பில்

பகடைகள் இரண்டு ஒன்றையொன்று உரசியபடி செல்கின்றன.

அடுத்து ரதத்தில் வந்திறங்குபவனின் பலமும் தோள்களில் இல்லை.

கண்களைச் சற்று சுருக்கிப் பார்க்கிறேன்.

சட்டைப்பையில் சிறு மயிலிறகும்,

உதட்டில் எதற்காகவோ ஒரு புன்முறுவலும்.

## <u>நதிப்பயணம்</u>

அந்த ராஜ நதியில் சிறிதும் பெரிதுமாய் மீன்கள்

கண்கள் பழுப்பும் மஞ்சளுமாய் விரிந்திருக்கின்றன.

வேறு நதிகள் இணையும் இடங்களில்

கொஞ்சம் தயக்கத்துடன் சக மீன்களுடன் நட்பாடுகின்றன.

பொட்டு வைத்த புழுக்கள் உற்றுப்பார்க்கையில் மீண்டும் தயக்கம்.

வயிறு முழுவதும் சிறுமீன்களைச் சுமந்திருந்த திமிங்கலங்கள்

ஆங்காங்கு நின்று இளைப்பாறிச் செல்கின்றன.

இரு கரைகளிலும் கிளையற்ற இலையற்ற நெடுமரங்கள்.

உச்சியில் சிறு சிறு கூட்டமாய் விட்டில் பூச்சிகள்

தினமும் பிறந்து இறந்து மறுபிறப்பில் நம்பிக்கையுடன்.

பட்டையில்லாத அம்மரங்களில் வல்லூறு கூட உட்காருவதில்லை.

பெருமூச்சுடன் நீந்தி வடு வந்து சேர்ந்தபின் பார்க்கிறேன்

என் உடலெங்கும் மீன் வாசம்.

மேல்தோலைக் கழற்றி வசிய பின் மழையில் நனைகிறேன்.

**என்**

என் நிழலை அவர்கள் சிதைத்துக்கொண்டிருந்தபோது

நானும் பார்த்துக்கொண்டுதானிருந்தேன்.

என்னிடம் இருந்த வேறு நான்கு நிழல்களை

நான் சிதைத்துத் திரும்புவதற்குள் நேரமாகிவிட்டிருந்தது.

நிழல்களையாவது சிதைக்க முடிந்தது.

அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆயுதங்கள் மழுங்கிவிட்டிருந்தன

இன்னொரு நிழலை உருவாக்க இன்னும் காலம் பல ஆகலாம்.

ஆனாலும் இன்னமும் என் உதட்டில் ஒட்டிக்கொண்டிருக்கும்

சிரிப்பின் குரூரம் கிளறும் வெப்பத்தை ரசிக்கவே செய்கிறேன்.

**<u>பூனை சார்ந்த வனம்</u>**

இந்த மரங்களுக்கிடையே எங்கேயோதான்

அந்தப் பூனை இருக்கவேண்டும்.

இரண்டு நாட்களாய்த் தேடிக்கொண்டிருக்கிறேன்.

அவ்வப்போது பளிச்சிடும் பச்சைக்கண்களுடன்,

கருப்பும், வெள்ளையும் கலந்த சாம்பல் பூசிய நிறத்துடன்

எவரையும் வசீகரிக்கும் அந்தப் பூனைக்கு

தினமும் ரொட்டித்துண்டுகள் கொடுக்கும்

அந்த மூதாட்டியையும் காணவில்லை.

மின்தூக்கியின் கதவுகள் திறந்து மூடும்போதெல்லாம்

அவரா அவரா எனப் பதைக்கும் மனது.

இன்று எப்படியும் பூனையைப் பிடித்துவிடத் தீர்மானம்.

சாலையைத் தாண்டி, பூங்கா கடந்து, ஓடையின் அக்கரையில்

மரங்களடர்ந்த பகுதிக்கு வந்தாயிற்று.

சிறிது தூரத்திலேயே கீழே ரொட்டித் துண்டுகள்.

இந்த மரங்களுக்கிடையே எங்கேயோதான்

அந்தப் பூனை இருக்கவேண்டும்.

வீட்டிற்குத் திரும்பிவிட்டேன்.

**<u>நாங்கள்</u>**

அவனைச் சந்திக்கப் போனபோது வீட்டில் அவன் இல்லை.
வழமை போல் லியோ தால்ஸ்தாயையோ
ழான் பால் சாற்றேவையோ சந்திக்கப் போயிருக்கலாம் என்று
அவன் மனைவி சொன்னாள்.
வருவதற்குத் தாமதமாகலாம் என்றும்
நான் போகும் வழியில் சுசானா அலகோஸ்கியைச் சந்தித்தால்
தன் நன்றிகளைக் கொடுக்கச் சொன்னாள்.
சிறு திடுக்கிடலுடன் திரும்பி நடந்தேன்.
பிறகு இவையெல்லாம் சாதாரணம்தானே என்ற எண்ணத்துடன்
தேநீர்க்கடைக்குள் நுழைந்தேன்.
நேற்றைப்போலவே ஒரு தேநீரும் மாவுப்பணியாரமும்.
ஜெயகாந்தனும் மிக ரசித்துச் சாப்பிட்டார்.
என்றையும் விட அவர் கொஞ்சம் அதிகமாகவே சிரித்தார் போல
உணர்ந்தேன்.